**செய்தி வெளியீடு எண் : 2099** **நாள் : 17.10.2023**

**மும்பையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற, உலகளாவிய கடல்சார் இந்திய உச்சி மாநாட்டில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் பங்கேற்று உரையாற்றினார்.**

உலகளாவிய கடல்சார் இந்திய உச்சிமாநாடு–2023 மும்பையில் அக்டோபர் 17 முதல் 19 வரை, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாநாட்டின் முதல் நாளான இன்று (17.10.2023), கடலோர மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் சிறு துறைமுகங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர்கள் பங்குப் பெற்றுள்ளனர். தமிழ்நாட்டின் சார்பாக, மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் கலந்து கொண்டார்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும், தனித்தனி அமர்வுகள் ஏற்படுத்தி, அந்தந்த மாநிலங்களில் முதலீட்டு வாய்ப்புகள், மாநிலத்திற்கான வளர்ச்சித் திட்டம், இணைப்பு நெட்வொர்க்குகள், முற்போக்கான உள்கட்டமைப்பு மற்றும் எளிதான வியாபாரம் போன்றவை தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிற்கான தனி அமர்வில், இன்று மாலை 4.00 மணி முதல் 5.30 மணி வரை, மாண்புமிகு தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், தலைமையில் விவாதம் தொடங்கியது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்களின் வரவேற்புரையை தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில்;

தமிழ்நாடு சிறப்பு அரங்கில், பங்குபெற்ற ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்கள் மற்றும் உலகளாவிய துறைமுகம் மற்றும் கடல்சார் நிபுணர்கள், முதலீட்டாளர்கள் அனைவரையும் வரவேற்று உரையை தொடங்கினார்.

இன்றைய உலக நடப்பில், அனைத்து நாடுகளின் வர்த்தகமும் நீர்வழிகளையே நம்பியுள்ளது. சுமார் 80% சதவீதம், சர்வதேச சரக்குகள் கப்பலின் வழியே பயணிக்கின்றன. ஆசிய நாடுகளில், சுமார் 64% சதவீதம் இறக்குமதி சரக்குளும், 42% சதவீதம் ஏற்றுமதி சரக்குகளும் கையாளப்படுகின்றன.

பண்டைய காலங்களில், தமிழ்நாடு, கடல்சார் வர்த்தகத்தில் மிக முக்கிய பங்காற்றியுள்ளது. சோழர் காலத்தில் கடல்சார் வர்த்தகத்தில் தமிழ்நாடு மையமாக திகழ்ந்துள்ளது. கொற்கை, அழகன்குளம், பூம்புகார், நாகப்பட்டிணம், கடலூர் ஆகிய துறைமுகங்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள துறைமுகங்களுடன் வர்த்தகத் தொடர்பை கொண்டிருந்தன. நம் முன்னோர்கள் கடல்சார் வணிகத்தின் முக்கியத்துவத்தை அறிந்து வைத்து செயல்பட்டுள்ளார்கள் என தெரிவித்தார்.

தமிழ்நாடு, 1,076 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கடற்கரையை கொண்டுள்ளது. இந்தியாவின் கடல்சார் செயல்பாடுகளில், தமிழ்நாடு மிக முக்கிய பங்காற்றி வருகின்றது. சர்வதேச கடல் வணிக பாதையின் அருகில், தமிழ்நாடு கடற்கரை அமைந்துள்ளது. இந்தியாவின் சிறப்புமிக்க சென்னை, எண்ணூர், தூத்துக்குடி ஆகிய மூன்று பெரும் துறைமுகங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

இந்த பெரும் துறைமுகங்களுடன், அறிவிக்கப்பட்டுள்ள 17 சிறு துறைமுகங்களும் உள்ளன. குறிப்பாக, காட்டுப்பள்ளி துறைமுகம், பெரும் துறைமுகங்களுக்கு இணையாக செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டு பேசினார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகங்களுடன் சிறு துறைமுகங்கள் முக்கிய பங்காற்றி, வளர்ந்துவர மிக சாதகமாக சூழ்நிலை தமிழ்நாட்டில் உள்ளது.

இந்திய கடல்சார் வளர்ச்சியில், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. கடல்சார் வணிகம் என்பது வெறும் சரக்கு போக்குவரத்து மட்டுமல்ல, நிலையான வளர்ச்சி,

வேலைவாய்ப்பு உருவாக்குதல், தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவைகளையும் உள்ளடக்கியது என்று தெரிவித்தார்.

இந்தியாவை உலக அளவில் கடல்சார் வர்த்தகத்தின் முதன்மையிடத்தில் கொண்டு செல்ல, நம் முன்னெடுப்புகள் பேருதவியாக உள்ளன. மேலும், உலக முதலீட்டாளர்கள் அனைவரும் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் திட்டங்களில், முதலீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்த அரங்கில் உள்ள அனைத்து முதலீட்டாளர்களிடம், தமிழ்நாட்டில் கடல்சார் கட்டமைப்பில் பல்வேறு வளர்ச்சி மற்றும் இணைந்து செல்படும் வாய்ப்புகள் உள்ளன என்றும், இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரை பகுதியை கொண்ட கடல் பகுதியில் ஒரு நுழைவு வாயிலாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, தமிழ்நாடு கடல்சார் வாரியம் முக்கிய பங்காற்றுகிறது. முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் அதிகமாக முதலீடு செய்வதை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெரிதும் விரும்புகிறார். எங்கள் முதலமைச்சர் அவர்கள் முதலீட்டுக்கு நல்ல சிறப்பான சாதகமான சூழ்நிலையை உருவாக்கி தருவதில் முனைப்பாக இருக்கிறார் என்பதால், உலக முதலீட்டாளர்கள், தமிழ்நாட்டில் அதிகமாக முதலீடு செய்யும்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பாக, கேட்டுக்கொள்வதாக தெரிவித்தார்.

மேலும், ஔவையார் பாடிய கொன்றைவேந்தனில் **"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு"** என்ற முதுமொழிக்கேற்ப, தமிழ்நாட்டில் முதலீடு செய்து திரவியம் தேட நல்ல காலசூழ்நிலை உள்ளது. இதனைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

எங்கள் முதலமைச்சர் அவர்கள், வரும் 2024 ஜனவரி மாதம் 7 மற்றும் 8 ஆம் தேதிகளில், சென்னையில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்த திட்டமிட்டுள்ளார். இங்கு வந்துள்ள அனைத்து முதலீட்டாளர்களையும்,

இம்மாநாட்டில் கலந்து கொள்ள, தமிழ்நாடு முதலமைச்சர் சார்பாக அன்புடன் அழைப்பதாக தெரிவித்து, முதலீட்டாளர்களின் முக்கிய இடமாக தொன்றுத்தொட்டு தமிழ்நாடு இருந்துள்ளது என்றும், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

உலகளாவிய கடல்சார் இந்திய உச்சி மாநாட்டில், தமிழ்நாட்டிற்கான அமர்வில், சென்னை துறைமுக ஆணையம் மற்றும் காமராஜர் துறைமுகத் தலைவர் திரு.சுனில் பாலிவால், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைவர் திரு.ராஜேஷ் லக்கானி, யோகோ ஹாமா டயர்ஸ் நிர்வாக துணைத் தலைவர் திரு.பத்மகுமார், இரயில் மற்றும் உள்நாட்டு முனையங்கள் துணைத் தலைவர் திரு.அதெந்த்ரு ஜெயின், APAC–TECO வணிக மேம்பாடு மற்றும் விற்பனை இயக்குநர் திரு. நிகில் கார்க், ACME குழுமத்தின் தலைமை இயக்க அதிகாரி திரு.சந்தீப் காஷ்யப், PSA இந்திய நிறுவனத்தின் மூத்த ஆலோசகர் திரு.கேப்டன் சுரேஷ் அமிரபு, JSW திட்டங்கள் செயல் துணைத்தலைவர் திரு.ராகேஷ் சிசோடியா, ஹூண்டாய் மோட்டார்ஸ் நிறுவன பிராந்திய விற்பனைத் தலைவர் திரு.சௌரப் ஷஹாபுர்கர் ஆகியோர்கள் விவாதத்தில் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மாநில துறைமுக அலுவலர் கேப்டன் எம்.அன்பரசன் நன்றியுரையாற்ற, இனிதே விவாதம் நிறைவு பெற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in